## பிரிட்டன் தேர்தலும் பென்னிகுக் சிலையும்...

வரலாற்று ஆளுமைகளை நினைவுகூர்ந்து அவர்களுக்கு சிலைகள் அமைப்பதும் மணிமண்டபங்கள் அமைப்பதும் கழக ஆட்சியின் தனித்துவம். அப்படி வரலாற்று நாயகர்களுக்கு சிறப்பு சேர்ப்பதில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், நம் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தொடர் பணிகளை ஆற்றி வருகிறார்.

திராவிடப் பேரொளி அயோத்திதாசர் நினைவு மண்டபம், வீரமாமுனிவர் மணிமண்டபம், பெரியவர் இளையபெருமாள் நூற்றாண்டு நினைவரங்கம், எழுத்தாளர் கி.ராஜநாராயணன் மணிமண்டபம், சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் சிலை, சிங்கப்பூரைச் சீரமைத்த லீ குவான் யூ ஆகியோருக்கு சிலை என்னும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த முயற்சிகளில் முக்கியமானது, முல்லைப்பெரியாறு அணையை உருவாக்கிய பென்னிகுக் அவர்களுக்கு சிலை. அதுவும் இங்கிலாந்தில் பென்னிகுக் பிறந்த ஊரான கேம்பர்ளியில் உள்ள பூங்காவில் 2022-ஆம் ஆண்டு நம் கழக அரசால் அவர் சிலை நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வரும் ஜூலை 4-ஆம் தேதி நடைபெறவுள்ள இங்கிலாந்து நாடாளுமன்றத் தேர்தலில் கேம்பர்ளி அமைந்துள்ள தொகுதியில் லிபரல் டெமாக்கிரட்ஸ் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் அல் பிங்கர்டன், பென்னிகுக் சிலை அருகே புகைப்படம் எடுத்ததுடன், 'பென்னிகுக் சிலை அமைத்ததற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாக'வும் கூறியுள்ளார்.

தேசங்கள் தாண்டியும் பரவுகிறது, நம் திராவிட மாடல் அரசின் புகழ்!

## :ப்ளாஷ்பேக்





கே.பாரதி

### மறுமலர்ச்சி நாயகரும், மறுமலர்ச்சி வசனமும்!

2000-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்த போது, அறிவிக்கப்பட்ட 'தமிழ்நாடு திரைப்பட விருது'களில், சிறந்த உரையாடல் ஆசிரியருக்கான விருது, நான் இயக்கி வசனமெழுதிய 'மறுமலர்ச்சி' திரைப்படத்திற்காக எனக்கு வழங்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கையால் இவ்விருதைப் பெற்றுக் கொண்டேன். பின்னர், ஒருநாள் அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது, எனது திரைப்படத்திற்கு விருது வழங்கியதன் காரணத்தைக் கேட்டேன், என்னை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு, கதைச் சுருக்கத்தைச் சொன்னார். திரைப்படத்தின் இறுதியில் இடம் பெற்ற வசனத்தை வரி மாறாமல் சொல்லிக் காட்டி பாராட்டினார். அப்போது ஏற்பட்ட வியப்பு இன்று வரை அப்படியே இருக்கிறது.

**- 'மறுமலர்ச்சி' கே.பாரதி, திரைப்பட இயக்குநர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கழக இலக்கிய மாநாடு!

1950-ஆம் ஆண்டு, மே மாதம் கோவையில் தி.மு.கழகம் நடத்திய முத்தமிழ் மாநாடு இலக்கிய உலகில் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி. தி.மு.கழகம் மாநாட்டை முன் நின்று நடத்தினாலும், திராவிட இயக்கத்தின் சார்பில்லாத பல்துறை அறிஞர்களை எல்லாம் அழைத்து, அவர்களது கருத்துக்களைப் பேச வைத்தது எந்தக் கட்சி வரலாற்றிலும் பார்க்க முடியாத ஒன்று. இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில், அவ்வை துரைசாமிப் பிள்ளை, வெள்ளை வாரணனார் போன்ற தலைசிறந்த தமிழ் அறிஞர்கள் எல்லாம் கலந்துகொண்டனர். அதன் பின்னர் தமிழ் இலக்கிய உலகில் இப்படி ஒரு மாநாடு நடைபெறவில்லை.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 17

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

## சுயராஜ்யமல்ல, சாதிதான் பிரச்சினை!

வங்காளத்தைப் பிரிக்கும் கர்சன் பிரபுவின் நிர்வாக முடிவை உயர்சாதி இந்துக்கள் தீவிரமாக எதிர்த்தனர். போராட்டங்கள் வெடித்தன. ஆனால், நாம சூத்திரர்களும், இஸ்லாமியர்களும், ஏனைய ஒடுக்கப்பட்ட பிரிவினரும் அவற்றை ஆதரிக்கவில்லை. மாறாக, எங்களுக்கும் அரசியல் உரிமைகள் வேண்டும் என்று அரசிடம் கோரினர். உதாரணமாக, **டாக்கா நாம சூத்திரா 'ஹிட்டை ஷைனி சமிதி'** எனும் அமைப்பினர் பிரிக்கப்பட்ட கிழக்கு வங்காளத்தின் துணை ஆளுநர் பேம்ப்பைடில் புல்லரை (BAMPFYLDE FULLER) சந்தித்து, நாம சூத்திரர்களின் பின்தங்கிய சமூக, பொருளாதார நிலைகளை எடுத்துரைத்து, உயர்சாதி இந்துக்களின் ஆதிக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இஸ்லாமியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அரசியல் உரிமைகளைப் போன்று எங்களுக்கும் வேண்டும் என்று கோரினர்.

**வங்காளத்தைப் பிரிப்பதை எதிர்க்கும் அவர்களின் போராட்டத்தை ஆதரிக்கமாட்டோம். மாறாக, இஸ்லாமிய சகோதரர்களுடன் கைகோர்ப்போம்!**

மறுபுறம் வெகுமக்களைத் திரட்டி, பொதுக் கூட்டங்களை நடத்தி, தீர்மானங்களை நிறைவேற்றினர். "எங்கள் மீது பிராமணர்கள், வைசியர்கள், காயஸ்தர்கள் போன்ற உயர்சாதியினர் செலுத்தும் ஆதிக்கம், வெறுப்பின் காரணமாக, நாங்கள் பின்தங்கிய நிலையில் இருக்கிறோம். எனவே, **வங்காளத்தைப் பிரிப்பதை எதிர்க்கும் அவர்களின் போராட்டத்தை ஆதரிக்கமாட்டோம். மாறாக, இஸ்லாமிய சகோதரர்களுடன் கைகோர்ப்போம்**" என்றது ஒரு தீர்மானம்.



மேக்நாத் சாஹா

நாம சூத்திரர்களைப் போன்று, தெலி உள்ளிட்ட மற்ற ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களும் தமது சமூக நிலைமைகளுக்கு ஏற்ப, ஒருவொருக்கொருவர் இணைந்தும் வேறுபட்டும் அரசியல், சமூகம், கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய பல்வேறு தளங்களில் தங்களுக்குரிய பங்கினை வலியுறுத்திப் போராடினார். கோரிக்கைகள், போராட்ட முறைகள் வேறுபட்டிருந்தாலும், அவர்கள் அனைவரும் உயர்சாதி இந்துக்கள் சமூகத்தில் பெற்றிருக்கும் எல்லையற்ற அதிகாரத்தை மறுத்தல் என்ற ஒற்றைப்புள்ளியில் ஒன்றிணைந்தனர்.

உரிமையைக் கோரி, போராடிய ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, இஸ்லாமிய இயக்கங்களின் சமூக, அரசியல் சித்தாந்தங்கள் பல்வேறு காரணங்களால் வேறுபட்டிருந்தாலும், பல நூற்றாண்டுகளாக அவர்களைச் சூத்திரர்களாகவும் இழிமக்களாகவும் அடக்கி வைத்த, அதிகார அமைப்பை எதிர்த்து உடைத்தல் என்ற பொதுப்புள்ளியில் அனைவரும் இணைந்தனர். வழிபடும் கடவுள்கள், கொண்டிருந்த நம்பிக்கைகள், பின்பற்றிய பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் ஒற்றுமையில்லை என்றாலும் தங்களைக் காலுக்குக் கீழே வைத்திருந்த அதிகார அமைப்பைக் கேள்விக்குள்ளாக்கும் கருத்தியலில் ஒற்றுமை இருந்தது.

இந்த ஒற்றுமையை உயர் சாதியினரால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. எனவே, சுயராஜ்யம் என்ற பெயரில் அதிகார மாற்றத்தைக் கோரிய உயர்சாதி இந்துக்கள் ஒடுக்கப்பட்டோரை 'ஆங்கிலேய அடிவருடிகள்' என்று தூற்றினர். சுயராஜ்யத்தை வலியுறுத்திய பிபின் சந்திர பால் போன்ற உயர்சாதித் தலைவர்கள் முதலில் ஆங்கிலேயர்களிடம் இருந்து விடுதலை பெறுவோம், தீண்டாமை உள்ளிட்ட சமூகப் பிரச்சினைகளைப் பிறகு தீர்த்துக் கொள்வோம் என்று வாதிட்டனர்.

இவர்களின் பிதற்றலுக்கு அசராத நாம சூத்திர இயக்கங்கள், முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டதைப் போன்று தங்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும், வங்காள சட்டப்பேரவையில் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாத இடங்களை சாதி அடிப்படையில் நாம சூத்திரர்களுக்கு ஒதுக்கவேண்டும் என்றும் கோரினர்.

ஒடுக்கப்பட்ட நாம சூத்திரா சமூகத்தில் பிறந்து, உலகம் போற்றும் அறிவியல் விஞ்ஞானியாக உயர்ந்த மேக்நாத் சாஹா, 1922-இல் நடந்த வங்காள இளைஞர் மாநாட்டில் பேசுகையில், 'ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெறுவது மட்டுமல்ல இந்தியாவின் பிரச்சினை, மாறாக தீண்டாமையை உள்ளடக்கிய சமூகப் பிரச்சினையைச் சரிசெய்வதிலும் உடனடிக் கவனம் தேவை' என்று உரத்துக் கூறினார்.

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** 17

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## கோவையில் மானுடக் கடல்!

பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு திருச்சி, வடஆற்காடு, இராமநாதபுரம், காஞ்சிபுரம், தஞ்சை, நீலகிரி, தருமபுரி, மதுரை, தென்னாற்காடு, நெல்லை, சேலம், புதுக்கோட்டை எனப் பல மாவட்ட மாநாடுகள், **'மதுரை மகளிர் மாநாடு'** போன்றவை நடைபெற்றிருந்ததாலும் தி.மு.க.வின் மாநில மாநாடு கூட்டப்படாமல் இருந்தது. அந்தக் குறையைப் போக்கும்விதமாக, 1975-ஆம் ஆண்டு டிசம்பர் 25, 26, 27, 28 ஆகிய தேதிகளில் கோவையில் ஐந்தாவது மாநில மாநாட்டைக் கூட்டினார் கழகத்தின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

கடலில்லா கோவையில், **'மானுடக் கடல்'** போல 20 இலட்சம் பேர் கலந்துகொண்ட பேரணி நடைபெற்றது. 7 மைல் தொலைவு நீண்டிருந்த பேரணி மாலை 4 மணிக்குத் தொடங்கி, 8.10 மணிக்கு மாநாட்டுப் பந்தலை அடைந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றினார். பொதுச்செயலாளர் நாவலர் மாநாட்டைத் திறந்து வைத்தார். மறுநாள் கலைநிகழ்ச்சிகளோடு காலையிலேயே மாநாட்டு நிகழ்வுகள் தொடங்கின. மாநாட்டுக்குத் தலைமையேற்குமாறு முத்தமிழறிஞர் கலைஞரை, கோவை ராஜமாணிக்கம் முன்மொழிய, மாவட்டச் செயலாளர்கள், மாநில அமைப்பாளர்கள், மாநாட்டுக் குழுவினர் வழிமொழிந்தனர்.

**'ஒரே நாடு ஒரே தேர்தல்' மாநில சுயாட்சி கண்ட கலைஞரை, மாநிலங்களை ஒழித்துக்கட்டும் திட்டத்துக்கு துணைக்கு அழைப்பது அரசியல் அறிவீனம்!**

கோயம்புத்தூரில் நடைபெற்ற மாநாட்டிற்குக் கலைஞரும் மற்ற தலைவர்களும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர்.



19 தியாகிகளின் படங்கள் மாநாட்டில் திறக்கப்பட்டன. நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி, தி.மு.க. அரசு கலைக்கப்படவுள்ளது என்று கசிந்த செய்திகள், கழகத் தொண்டர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. மாநாட்டில் பேசிய தலைவர்களையும் அந்தக் கொந்தளிப்பு விட்டுவிடவில்லை. தலைமையுரை ஆற்றிய கலைஞர், "28-ஆம் தேதி ஆட்சிக் கலைப்பு செய்தி வரும் என்று ஏடுகளில் எழுதியிருப்பதாகப் பலரும் பேசினார்கள்.

நான் பேசிமுடித்துவிட்டு பந்தலை விட்டு வெளியே போகும் நேரத்தில், அந்த செய்தி வந்தாலும், எங்களைப் போல பரவசம் அடைபவர்கள் யாரும் இருக்க முடியாது. நான் கிரீடம் பற்றி கவலைப்படுபவன் அல்ல, அந்தக் கிரீடத்தை தாங்கும் தலையைப் பற்றி கவலைப்படுபவன். அமைச்சரவை என்ற கிரீடம் போகலாம், ஆனால், தலை என்கிற திராவிட முன்னேற்றக் கழகம் இருக்க வேண்டும்" என்றார்.

மூன்றாவது நாளில் பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநிறுத்த, பிரதமர் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து, வட்டமேசை மாநாட்டைக் கூட்ட வேண்டும்" என்ற தீர்மானம் முக்கியமானது. அதேபோல, 1976-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றத் தேர்தலோடு, தமிழ்நாடு மாநில சட்டமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டுமென்று மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத்துக்கும் தமிழ்நாடு சட்டமன்றத்துக்கும் அடுத்தடுத்து சில மாதங்களில் நடத்தப்பட விருந்த தேர்தலை ஒரே நேரத்தில் நடத்திவிடலாம் என்பதே கலைஞரின் அன்றைய நோக்கம்.


அதை இப்போது, பாஜகவின் "ஒரே நாடு-ஒரே தேர்தல்" கனவோடு முடிச்சு போடுகின்றனர் சிலர். அனைத்து மாநில சட்டமன்றங்களையும் கலைக்கச் சொல்வதே 'ஒரே நாடு ஒரே தேர்தல்' மாநில சுயாட்சி கண்ட கலைஞரை, மாநிலங்களை ஒழித்துக்கட்டும் திட்டத்துக்குத் துணைக்கு அழைப்பது அரசியல் அறிவீனம் என்பதை சொல்லவும் வேண்டுமோ?!

**...கூட்டம் திரளும்**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

520

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131